1981 ஏப்ரல் 6]

பெறுகின்ற பணத்தை கிணறு வெட்ட பயன்படுத்துவதில்லை· அப்படி முழுமையாகப் பயன்படுத்தினாலும் தண்ணீர் வருவ தில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அரசே கிணறை வெட்டிக் கொடுத்து தவணை முறையில் விவசாயி களிடம் பணத்தை அரசு பெற்றுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத் துறையின் கீழ் ட்யூப்வெல் கார்ப்ப ரேஷன் என்ற ஒரு அமைப்பினை நிறுவி, அதன் மூலம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இராமநாதபுரம் போன்ற பகுதி களில் இருக்கின்ற விவசாயிகளின் இன்னல்களைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கழிவுப் பஞ்சுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி.

*வினா எண். 657—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள 150-க்கு மேற்பட்ட வேஸ்ட் காட்டன் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: *(அ)-(இ)* தமிழகத்தில் உள்ள வேஸ்ட் காட்டன் மில்களில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கு 5-4-1969 முதல் குறைந்த பட்ச ஊதியம் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்ச ஊதிய விகிதத்தை திருத்தி அமைப்பதற்காக அரசுக்கு ஆலோசனை வழங்க 1977ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. கழிவுப் பஞ்சுத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொழில் சார்பாக இக்குழுவில் உறுப்பினர்கள் இல்லையாதலால் இத்தொழில் சார்பாக தொழிலாளர் தொழிலதிபர் சார்பாக மேலும் ஒவ்வொரு உறுப்பினரை நியமிப்பதுபற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில்இருந்தது. எனவே இக்குழு தனது கூட்டத்தை 24-5-1977 நடத்தி விட்டு, கூடுதல் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கூட்டத்தை மேலும் நடத்தலாம் என முடிவு செய்தது. கூடுதல் உறுப்பினர்களை நியமித்து 8—4—1980-ல் ஆணை வெளியிடப் பட்டது. ஆனால் இந்தக் குழுவில் தொழிலாளர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு பாலன் என்பவர் இறந்து விட்டதால் அவருக்குப் பதிலாக கோவை மாவட்ட ஆலைத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எம். நஞ்சப்பன் என்பவர் இக் குழுவில் மாற்று உறுப்பினராக, 18—2—1981-ல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். குழுவின் பரிந்துரைகளை திரு. நஞ்சப்பன் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் வந்த பின்பு அதனை ஆராய்ந்து குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் விரைவில் திருத்தியமைக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மில்களுக்கு 'வேஸ்ட் காட்டன் மில்கள்' என்ற பெயர் வைத்திருப்பதே 'மிஸ் நாமாராக' இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். உண்மையிலே இதிலே உபயோகப்படுத்துவது வேஸ்ட் காட்டன் அல்ல ; நல்ல பஞ்சினை உபயோகப்படுத்தி 60 கவுண்ட், 40 கவுண்ட், 80 கவுண்ட் என்று நூல்களை நெய்கிறார்கள். பெரிய மில்கள் அவற்றை வாங்கி அவர்களின் 'பிராண்டை' போடுகிறார்கள். ஆகவே பஞ்சாலைதொழிலாளர்களுடைய ஊதியத்தை, அந்த 'ஸ்டாண்டர்டை' பிரேக் பண்ணுவதற்கு முதலாளிகள் அப்படி ஒரு தந்திரம் பின்பற்றுவதனலே அந்த 'லெவலில்' இவர்களுக்கு அந்த நூலுக்கு உற்பத்தி கொடுப்பதற்கு இந்த பிரத்யேக நிலைமையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு பரிந்துரை, இந்த கமிட்டி புரொசீடிங்ஸ் முன்னாலே அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே யோசனை கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே, தமிழகத்தில் உள்ள 150-க்கு மேற்பட்ட வேஸ்ட் காட்டன் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வது குறித்துத் தான். வேஸ்ட் காட்டன் மில்லைப் பற்றியது தான்.

திரு. ரா. உமாநாத் : வேஸ்ட் காட்டன் மில் என்று தான் கேள்வி போட்டேன்; ஆனால்..

1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேஸ்ட் காட்டன் மில் என்று சொல்கிறார்களே, ஆனால் அவைகளிலே புதிதாக் பஞ்சை வாங்கி உற்பத்தி செய்கிறார்களே, அது ஏன் என்று தான் கேட்டார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைத் தனியாக இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டும், அதற்குக் கேள்வி தனியாகப் போட வேண்டும். இந்தக் கேள்வியிலே வேஸ்ட் காட்டன் மில்லிலே வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: இன்வெஸ்டிகேஷன் பற்றிய பிரச்சினையல்ல.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போட வேண்டும் என்று சொல்லி விட்டார்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, நான் கேட்க இருந்த துணை வினாவை தோழர் உமாநாத் அவர்கள் கேட்டுவிட்டார்கள், இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை பற்றி கேட்க விரும்புகிறேன். வேஸ்ட் காட்டன் என்ற பெயரை வைத்துக் கொண்டு அங்கே அதிகம் உயர்ந்த ரக நூலைத்தான் உற்பத்தி செய்கிறார்கள். தொழிலாளர்களுக்குரிய ஊதியத்தைக் கொடுக்காமல் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தை முறையாகக் கொடுக்காமல் ஏமாற்றுகிற நிலைமை இருக்கிறது, அதை முறையாகப் பரிசீலனை செய்து அந்த மில்களுக்கு அதிகாரிகளை அனுப்பி அங்கே வேஸ்ட் காட்டன் உண்மையிலேயே உற்பத்தி செய்கிறார்களா என்பதைப் பார்க்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இருக்குமானால் அதைப் பற்றி பரிசிலனை செய்யலாம். தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் குடிநீர் வசதியினை அதிகப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 658—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் குடிநீர் வசதியை அதிகப்படுத்தி தரும் செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?